# பத்திரிக்கை செய்தி

## சாத்தியக்கூறு சான்றிதழ் வழங்க ரூ.10,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய தொகுதி சுகாதார மேற்பார்வையாளர் கைது

புகார்தாரர் திருமதி.சரண்யா, முதல்வர், பிபிஆர்.பள்ளி மற்றும் செவிலியர் கல்லூரி, வேலூர் மாவட்டத்தில் உள்ளார். புகார்தாரர் தன்னுடைய செலவிலியர் கல்லூரியில் இறுதி ஆண்டு படித்து வரும் மாணவிகளுக்கு 2023-2024ம் வருட கல்வியாண்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பயிற்சி அளிக்க சாத்தியக்கூறு சான்றிதழ் கேட்டு 18.02.2023ம் தேதி துணை இயக்குநர், சுகாதாரம், வேலூர் அவர்களுக்கு மனு செய்திருந்தார். இம் மனுவானது கடந்த இரண்டு மாதங்களாக எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கபடாமல் நிலுவையில் இருந்துள்ளது. கடந்த 15.04.2023ம் தேதி திரு.கிருஷ்ணமூர்த்தி, தொகுதி சுகாதார மேற்பார்வையாளர், ஆணைக்கட்டு பிளாக், ஆரம்ப சுகாதார நிலையம், ஒடுக்கத்தூர், வேலூர் மாவட்டம் அவர்கள் செவிலியர் கல்லூரியின் துணை முதல்வரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு மனுவினை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். பின் 17.04.2023ம் புகார்தாரரான முதல்வரை தொடர்பு கொண்டு தானே கல்லூரியை நேரில் வந்து ஆய்வு செய்வதாக கூறி பின் அன்று பிற்பகலில் நேரில் வந்து லஞ்ச பணம் ரூ.10,000/- கொடுத்தால் இரண்டு நாட்களில் சான்றிதழ் கிடைக்க ஏற்பாடு செய்கின்றேன் என கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை வேலூர் பிரிவு அலுவலகத்தை அணுகி மேற்படி திரு.கிருஷ்ணமூர்த்தி மீது புகார்மனு கொடுத்துள்ளார். இப் புகாரின் பேரில் இன்று 19.04.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.கிருஷ்ணமூர்த்தி தொகுதி சுகாதார மேற்பார்வையாளர், லஞ்ச பணம் ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

## PRESS NOTE

## BLOCK HEALTH SUPERVISOR ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.10,000/- FOR ISSUING FEASIBILITY CERTIFICATE

The complainant Tmt.Saranya, Principal, BPH School and Nursing College, Vellore District, had applied for feasibility certificate at Deputy Director Office, Health Service, Vellore District on 18.02.2023 for sending the final year nursing college students to government primary health centre for pracrtice. The application was pending at the Deputy Director office more than two months. On 15.04.2023 Tr.Krishnamoorthy, Block Health Supervisor, Anaicut Block, Primary Health Center, Odugathur, Vellore District contacted the vice principal over phone and demanded Rs.10,000/- for processing the application. On 17.04.2023 Tr.Krishnamoorthy, again contacted the vice principal over phone and demanded Rs.10,000/-. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Vellore detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 19.04.2023, during the trap proceedings, Tr.Krishnamoorthy, Block Health Supervisor, reiterated his earlier demand and received the bribe amount of Rs.10,000/- from the complainant. The Accused was arrested.